கொல்லிமலையில் ரூ. 4.22 கோடியில் நவீன 'தமிழ்நாடு உணவகம்'

அக்டோபரில் திறக்க ஏற்பாடு

எம்.மாரியப்பன்

நாமக்கல், ஆக. 26: கொல்லிமலையில், இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் நவீன வசதிகள் கொண்ட தனித்தனி குடியிருப்புடன் கூடிய 'தமிழ்நாடு உணவகம்' ரூ. 4.22 கோடியில் கட்டப்பட்டு திறப்பு விழாவுக்கு தயார்நிலையில் உள்ளது.

அக்டோபர் மாதம் காணொலிக் காட்சி வாயிலாக இதை தமிழக முதல்வர் திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகளை சுற்றுலாத் துறை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு உணவகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் எல்.மதுபாலன், சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர் காமில்அன்சர்.

அமுதகம் உணவகம்.

தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள கொல்லிமலை. இங்குள்ள ஆகாய கங்கை அருவி, நம் அருவி, மாசிலா அருவியில் குளிக்கவும், தாவரவியல் பூங்கா, படகு குழாம், சீக்குப்பாறை காட்சிமுனை ஆகியவற்றை காணவும், குளிர்ச்சியான தட்பவெப்ப நிலையை அனுபவிக்கவும், வாரவிடுமுறை நாள்களிலும், ஏப்ரல், மே மாத காலங்களிலும் இங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகம்.

உதகை, கொடைக்கானல், ஏற்காட்டுக்கு நிகராக கொல்லிமலை இல்லாதபோதும், இயற்கை எழில் சூழ்ந்த மலைப் பகுதிகளை காண குறுகிய வடிவிலான 70 கொண்டை ஊசி வளைவுகளில் வாகனங்களில் பயணிப்பதற்கு சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். குறிப்பாக, கர்நாடக மாநிலத்தில் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றும் இளைஞர்கள், பெண்கள் தங்களது அதிநவீன இருசக்கர வாகனங்களில், கொல்லிமலை வளைவுகளில் விடுமுறை நாள்களில் சீறிப்பாய்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் தற்போது கொல்லிமலைக்கு வருவோர் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்துள்ளது.

அதற்கேற்ப, பல்வேறு வசதிகளுடன் தனியார் விடுதிகள், உணவகங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

கொல்லிமலை சுற்றுலாத்தலம் என்றபோதும், தமிழ்நாடு சுற்றுலாத் துறையின்கீழ் இயங்கும் 'தமிழ்நாடு உணவகம்' இங்கு இல்லாத நிலையே இருந்தது. இந்நிலையில் கடந்த 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அமுதகம் என்ற உணவகத்துடன் கூடிய நவீன தங்கும் விடுதிகளை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது.

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் ஆய்வுக்கு வரும் மத்திய, மாநில அரசுத் துறை உயர் அதிகாரிகள், பிற மாநிலத்தவர், வெளிநாட்டினர் கொல்லிமலையில் தங்குவதற்கு ஏற்ப இயற்கை எழில் சூழ்ந்த விடுதிகள் இல்லை. பிற தனியார் விடுதிகளில் போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லை என கூறப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு உணவகம் அமைப்பதற்கான நடவடிக்கையை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டது. முதல்கட்டமாக 2025 இல் ரூ. 2 கோடியில் கொல்லிமலை வாசலூர்பட்டி தாவரவியல் பூங்கா அருகில் 13 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு உணவகம், தங்கும் விடுதிகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கின. 50 சதவீத பணிகள் நிறைவடைந்த நிலையில் மேலும் ரூ. 2.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் ஒன்றரை ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றன.

தற்போதைய நிலையில் நவீன வசதிகளுடன் 15 தனித்தனி விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி, 30 பேர் அமர்ந்து உணவருந்தும் வகையில் அமுதகம் என்ற பெயரில் உணவகம் உருவாக்கப்பட்டுள்ளது. பணிகள் முழுவதும் நிறைவடைந்து திறப்பு விழாவுக்கு தயார்நிலையில் உள்ளது. அக்டோபர் மாதம் முதல்வர் ச.ஜோசப்விஜய் காணொலிக் காட்சி வாயிலாக இந்த தமிழ்நாடு உணவகத்தை திறந்து வைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது.



கொல்லிமலை, வாசலூர்பட்டி தாவரவியல் பூங்கா அருகில் மரத்தால் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு உணவகத்தின் தனித்தனி விடுதிகள்



இதுகுறித்து சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கூறியதாவது:

கொல்லிமலையில் தமிழ்நாடு உணவகம் கட்டுமானப் பணிகள் முழுமையாக முடிவடைந்து விட்டன. அண்மையில் மாவட்ட ஆட்சியர் எல். மதுபாலன் ஆய்வு செய்து திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். ரூ. 4.22 கோடியில் இரண்டு கட்டங்களாக 13 ஏக்கர் பரப்பளவில் மரத்தினால் உருவாக்கப்பட்ட 15 தனித்தனி விடுதிகளும், அமுதகம் என்ற பெயரில் உணவகமும் கட்டப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் தங்கி இயற்கையை ரசிப்பதற்கான அனைத்து வசதிகளும் உள்ளன. வழக்கமாக ஒப்பந்த அடிப்படையில் தான் தமிழ்நாடு உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்தவகையில் கொல்லிமலையில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு உணவகத்தையும் தனியாரிடம் ஒப்பந்தம் விடுவதற்கான நடவடிக்கைகள் சுற்றுலாத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. அக்டோபர், நவம்பர் மாதங்களுக்குள் தமிழக முதல்வர் இதைத் திறந்துவைப்பார் என எதிர்பார்க்கிறோம் என்றனர்.

இன்று வடுகப்பட்டி கன்னட வீரமார்த்தியம்மன் கோயில் குடமுழுக்கு

காவிரி ஆற்றிலிருந்து கோயிலுக்கு புனித நீர் எடுத்துச் செல்லும் பொதுமக்கள்.

சங்ககிரி, ஆக. 26: சேலம் மாவட்டம், சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட வடுகப்பட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீ கன்னட வீர மார்த்தியம்மன் கோயில் குடமுழுக்கு வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இதையொட்டி கோயில் வளாகத்தில் கடந்த 9 ஆம் தேதி முகூர்த்தக்கால் நடுதல் மற்றும் சிறப்பு பூஜைகளுடன் யாகசாலை அமைக்கும் பணிகள் தொடங்கின. புதன்கிழமை பக்தர்கள் காவிரி ஆற்றுக்குச் சென்று புனித நீர் எடுத்து வந்தனர். பின்னர், கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்று கோயிலுக்குச் சென்று சிறப்பு வழிபாடு நடத்தினர்.

வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஸ்ரீ விநாயகர் வழிபாடு மற்றும் யாகசாலை பூஜைகள் நடைபெறுகின்றன. தொடர்ந்து காலை 9.15 மணிக்கு குடமுழுக்கு நடைபெறுகிறது.

சேலம் ராஜகணபதி கோயில் தீர்த்தக்குட ஊர்வலம்

சேலம், ஆக. 26: சேலம் ராஜகணபதி கோயில் குடமுழுக்கையொட்டி, புனித நீர் கலசங்களுடன் தீர்த்தக்குட ஊர்வலம் புதன்கிழமை நடைபெற்றது.

சேலம் தேர்வீதியில் உள்ள ராஜகணபதி கோயில் குடமுழுக்கு விழா வரும் 30 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி, கோயில் கருவறை முன் புதிய கொடிமரம் கடந்த 16 ஆம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்டது.

தொடர்ந்து, கடந்த 24 ஆம் தேதி கணபதி யாகமும், 25 ஆம் தேதி திருவிளக்கு பூஜையும் நடைபெற்றன. புதன்கிழமை காலை பழைமையான அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் இருந்து புனித நீர் கலசங்களுடன் தீர்த்தக்குட ஊர்வலம் தொடங்கியது. செண்டை மேளங்கள் முழங்க, யானை மீது தீர்த்தக்குட ஊர்வலம் புறப்பட்டது.

தொடர்ந்து ஒட்டகம், குதிரை, ஜல்லிக்கட்டு மாடுகள் அணிவகுத்துச் சென்றன. 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தீர்த்தக்குடங்களை சுமந்து ஊர்வலமாகச் சென்றனர்.

மேட்டுத் தெரு, முதல் அக்ரஹாரம் வீதிகள் வழியாக வந்த ஊர்வலம், தேர்வீதி பகுதியில் உள்ள ஸ்ரீ ராஜகணபதி திருக்கோயிலை அடைந்தது. ஊர்வலத்தில் வெள்ளைக் குதிரையின் நடனம் பக்தர்களை வெகுவாகக் கவர்ந்தது. அதேபோல பொம்மை வேடம் அணிந்து வந்த பக்தர்கள் நடனமாடி மகிழ்வித்தனர்.

சேலம் ராஜகணபதி கோயில் குடமுழுக்கையொட்டி புதன்கிழமை நடைபெற்ற தீர்த்தக்குட ஊர்வலத்தில் பங்கேற்ற பெண்கள்.

தொடர்ந்து, 27 ஆம் தேதி வாஸ்து சாந்தி பூஜையும், 28 ஆம் தேதி 4 கால யாகசாலை பூஜையும் தொடங்க உள்ளது. 29 ஆம் தேதி 2, 3 ஆம் கால யாக பூஜைகள் நடைபெற உள்ளன.

விழாவின் முக்கிய நிகழ்வான குடமுழுக்கு வரும் 30 ஆம் தேதி காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறையினர், கோயில் அறங்காவலர் குழு நிர்வாகிகள் மற்றும் திருப்பணி உபயதாரர்கள் செய்து வருகின்றனர்.

இதனிடையே, குடமுழுக்கு விழாவையொட்டி முதல் அக்ரஹாரம் வீதி, தேர்வீதி உள்ளிட்ட இடங்களில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மீலாது நபி: இஸ்லாமியர்கள் அமைதிப் பேரணி

மீலாது நபியையொட்டி சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற அமைதிப் பேரணியில் பங்கேற்ற இஸ்லாமியர்கள்.

சேலம், ஆக. 26: மீலாது நபியையொட்டி இஸ்லாமியர்கள் பங்கேற்ற அமைதிப் பேரணி புதன்கிழமை நடைபெற்றது.

மீலாது நபி பண்டிகையையொட்டி சேலம் கோட்டை பகுதியில் நடைபெற்ற அமைதிப் பேரணியை மேயர் ஆ. ராமச்சந்திரன் தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து, ஆட்சியர் அலுவலகம், திருவள்ளுவர் சிலை வழியாக சென்று, ஸ்டாக் ஹால் அருகே நிறைவடைந்தது. இதில் திரளான இளைஞர்கள் பங்கேற்றனர். தொடந்து, உறவினர்கள், நண்பர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ந்தனர்.

இதேபோல மீலாது நபியையொட்டி பள்ளிவாசல்களில் நபிகள் நாயகத்தின் வாழ்வியல் நெறிகள் மற்றும் நற்பண்புகள் குறித்த சிறப்பு சொற்பொழிவுகள் நடைபெற்றன. இதில் திரளான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

நாளை சேலம் மாமன்ற கூட்டம்

சேலம், ஆக.26: சேலம் மாமன்ற கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் லலித் ஆதித்ய நீலம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிகழ் மாதத்துக்கான சேலம் மாமன்ற கூட்டம் வரும் 28 ஆம் தேதி காலை 11 மணிக்கு மேயர் ஆ. ராமச்சந்தின் தலைமையில் நடைபெறுகிறது. இதில், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விம்ஸ் கல்லூரியில் ஓணம் திருநாள்

விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் ஓணம் திருநாளை கொண்டாடிய மாணவர்கள்.

ஆட்டையாம்பட்டி, ஆக. 26: விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் நுண்கலை அமைப்பின் மூலம் செவ்வாய்க்கிழமை ஓணம் பண்டிகை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதன்மையர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். ஓணம் வரலாறு குறித்து மாணவர்களுக்கு விளக்கி வாழ்த்துகளை தெரிவித்தார். விழாவையொட்டி கல்லூரி வளாகத்தில் அத்தப்பூ கோலம் போடப்பட்டு, மாணவர்கள் கேரள பாரம்பரிய நடனமாடினர். தொடர்ந்து மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், விளையாட்டு போட்டிகளும் நடத்தப்பட்டன.

விழா ஏற்பாடுகளை கல்லூரியின் நுண்கலை அமைப்பின் ஆலோசகர் கலைவாணி மற்றும் உதவி பேராசிரியர்கள் உமா மகேஷ்வரி , ராஜஸ்ரீ , மெர்லின், பிரத்தியங்கரா ஆகியோர் செய்திருந்தனர்.

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.

பதிவு அலுவலகம் : ராதிகா, 2–ஆவது தளம், லா கார்டன் சாலை, நவரங்க்புரா அஹமதாபாத் – 09. மண்டல அலுவலகம் : தரைத்தளம், ஜெனீத் ஹவுஸ், கேசவராவ் கத்யே மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாலட்சுமி, மும்பை–34 தொபே:022–39586300

அதிகாரப்பூர்வ அலுவலர் : M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண். 3, திவ்யா டிரேட் சென்டர், இரண்டாம் தளம், பிருந்தாவன் சாலை, சேலம்– 636 016. S.A. ரஞ்சித் (+919952535434)

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய மின்–ஏலத்துக்கான ஏல விற்பனை அறிவிப்பு

(பெறுநர்: கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பரவலாக பொதுமக்கள்)

(சர்ஃபாசி சட்டம் 2002, விதி 8(6) அதனுடன் விதி 9(1) ஆகியவற்றின் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன்படி பின்வரும் சொத்தை கீழ்க்காணும் கடன் கணக்குக்காக "உள்ளது உள்ள இடத்தில் & உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் சுவாதீனம் செய்துள்ளார்.

விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி : 1. சரவணன் பவர்லூம்ஸ் கதவு எண் .217 மாட்டயாம்பட்டி தெசவிளக்கு அஞ்சல் எடங்கணசாலை இளம்பிள்ளை–637502 தமிழ்நாடு மற்றும் இன்னொரு முகவரி SF எண் 387/3 கதவு எண் .217 மாட்டயாம்பட்டி தெசவிளக்கு பேரூராட்சி இளம்பிள்ளை–637502 2. பொற்செல்வி சரவணன் கதவு எண் 217 மாட்டயாம்பட்டி தெசவிளக்கு அஞ்சல் எடங்கணசாலை இளம்பிள்ளை–637502 தமிழ்நாடு 3. சரவணன் சின்னதம்பி கதவு எண் 217 மாட்டயாம்பட்டி தெசவிளக்கு அஞ்சல் எடங்கணசாலை இளம்பிள்ளை–637502 தமிழ்நாடு. கடன் கணக்கு எண்கள்: 9740032, 15015787, 31493695. மொத்த நிலுவைத்தொகை: :Los.9740032–க்கு ரூ.19,50,419.31/– (ரூபாய் பத்தொன்பது லட்சத்து ஐம்பதாயிரத்து நானூற்று பத்தொன்பது மற்றும் முப்பத்தொரு பைசா மட்டும்), Los.15015787–க்கு ரூ.6,476/– (ரூபாய் ஆறாயிரத்து நானூற்று எழுபத்தாறு மட்டும்) மற்றும் Los.31493695–க்கு ரூ.20,31,054.73/– (ரூபாய் இருபது லட்சத்து முப்பத்து ஓராயிரத்து ஐம்பத்து நான்கு மற்றும் எழுபத்து மூன்று பைசா மட்டும்) மொத்தம் ரூ. 39,87,950.04/– (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மற்றும் நான்கு பைசா மட்டும்) 3 கடன்களுக்கான 26.08.2026 அன்றுள்ளபடியான இத்தொகையுடன் முழுத்தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான மேல் வட்டி / இடைநிகழ் செலவுகள் / செலவினங்கள் ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குத் தெரிந்து ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின் அவற்றின் விவரங்கள்: – ஏதும் இல்லை

அசையாச் சொத்தின் விவரங்கள்: அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட சொத்து அமைவிடம் : சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு அலுவலகம், சங்கரி வட்டம், எடங்கணசாலை (பிட்–1) கிராமம். பட்டா எண்: 3076. சர்வே எண்: 387/3. புஞ்சை ஹெக்டேர்: 0.71.0 ஏக்கர் 1.75. இதில், கீழ்க்கண்ட எல்லைகளுக்கு உட்பட்ட, கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள 0.50 சென்ட் சொத்து எல்லைகள் பின்வருமாறு: வடக்கு – சின்னதம்பி பிற சொத்து; கிழக்கு – தெசவிளக்கு கிராம எல்லைச் சொத்து; தெற்கு – சின்னதம்பி பிற சொத்து சர்வே எண்: 387/4A. இச்சொத்தில், குறிப்பிட்ட புஞ்சை பரப்பளவு 0.50 சென்ட் நிலமும், அதில் அமைந்துள்ள கட்டடமும், அதற்கான அனைத்து புழக்க உரிமைகள் அடங்கும்.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை	ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித்தொகை (EMD) செலுத்த கடைசி நாள் மற்றும் நேரம்
ரூ.67,99,540 /–	ரூ.6,79,954/–	ரூ. 1,00,000/–	29.09.2026 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடங்கள் நீட்டிப்புடன்	28.09.2026 அன்று மாலை 05.00 மணிவரை

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏல விற்பனையானது "இணைய வழி மின்–ஏல" முறையில் https://www.bankeauctions.com இணையத்தளத்தில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில் எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும். 2.ஆர்வமுள்ள ஏலதாரர்கள் https://www.bankeauctions.com (the user ID & https://www.bankeauctions.com) இணையத் தளத்தில் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி டேவணித்தொகையைச் செலுத்தலாம் டேவணித்தொகையைக் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% எனும் அளவில் "HDB Financial Service Limited" எனும் பெயரிலான செலுத்தாணை (Order) / கேட்பு வரைவோலை (DD) வடிவில் செலுத்த வேண்டும். இணையத் தளத்தில் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாளுக்கும் நேரத்துக்கும் முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணையத் தளத்தில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு நகல் அல்லது கேட்பு வரைவோலை, ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று எவாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்ன அஃதாவது சுயசான்றொப்பம் செய்யப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல் போன்றவை . இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இவை தவிர, பின்னிணைப்பு–II & III ஆகியவற்றின் (இவற்றை https://www.bankeauctions.com இணையத் தளத்தில் தரவிறக்கிக் கொள்ளலாம்) ஒளிவருடல் நகல்களை (scanned copies) முறையாக நிரப்பிக் கையொப்பமிட்டுப் பதிவேற்றுவதும்கூட அவசியமாகும். பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் போன்றவற்றுக்கு உதவி தேவைப்படுகிற மற்றும் இணைய வழி உள் ஏலக்கோரலுக்கான பயிற்சி / செய்முறை விளக்கம் தேவைப்படுகிற ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: . M/s. C1 India Pvt Ltd, ப்ளாட் எண். 68, 3 வது தளம், செக்டார் – 44, குர்கான் ஹரியாணா – 122 003 மின்னஞ்சல் – support@bankeauctions.com, தொடர்பு நபர் பெயர்/ மின்னஞ்சல் முகவரி/ தொடர்பு எண்: 1.தரணி கிருஷ்ணா / andhra@c1india.com / தொலைபேசி:9948182222, 3.ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலத்துக்கு நேரிடையாக வந்து தாங்களே தனிப்பட்ட முறையில் கலந்து கொள்வதோடு தாங்கள் தங்களுக்காகத்தான் ஏலத்தில் கலந்து கொள்வதாக எழுத்துப்பூர்வமாக பிரகடன அறிக்கை (declaration) தர வேண்டும். தன்/ அவர் சார்பாக அதிகாரப்பூர்வ நபரை அனுப்பி வைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 4.ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தைப் பெற அணுக வேண்டியவர்: மேலாளர் : M/s. HDB ஃபைனான்சியல் HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., எண். 3, திவ்யா டிரேட் சென்டர், இரண்டாம் தளம், பிருந்தாவன் சாலை, சேலம்– 636 016.5 ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தை மட்டும் நிரப்பி உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் என முகவரியிட்டு குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையை "HDB Financial Service Limited என்ற பெயரில் எடுக்கப்பட்ட செலுத்து ஆணை (PO) / கேட்பு வரைவோலை (DD) இணைத்து 28.09.2026 அன்று மாலை 05.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்க வேண்டும். 6. சொத்து ஆய்வு மற்றும் இதர விவரங்களுக்கு ஆர்வமுள்ள ஏலதாரர் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிட்., எண். 3, திவ்யா டிரேட் சென்டர்,இரண்டாம் தளம், பிருந்தாவன் சாலை, சேலம்– 636 016. S.A. ரஞ்சித் (+919952535434) 7. சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி" எனும் நிபந்தனைகள் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். 8. இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் 29.09.2026 அன்று முற்பகல் 11:00 மணிக்குத் திறக்கப்படும். பொதுவாக ஏலமானது மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக நடைபெறும் என்றாலும்கூட, மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகையை விடக் கூடுதலாக ஏலம் கோர விரும்பும் ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கிடையே அதிகாரப்பூர்வ அலுவலர் தனது விருப்புரிமையின் பேரில் வெளிப்படையான ஏலத்தை நடத்தக்கூடும். அப்படி நடந்தால் அந்த நேரத்தில் உச்சபட்சத் தொகைக்கு ஏலம் கோருபவருக்கே விற்பனை முடிவு செய்யப்பெறும். எப்படி இருந்தாலும் விற்பனையானது HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெடின் உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. 9. வெற்றி பெறும் ஏலதாரர் விற்பனைத் தொகையில் 25%–ஐ (டேவணித்தொகை உட்பட) விற்பனை முடிந்த உடன் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு முன்னதாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 15 நாள்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால் முதலில் செலுத்தப்பட்ட 25% தொகை பறிமுதல் செய்யப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இது திருப்பித் தரப்படமாட்டாது. ஒருவேளை வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே குறிப்பிட்டபடி மொத்த விற்பனைத் தொகையின் 25%–ஐச் செலுத்தத் தவறினால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு விற்பனை உறுதி செய்ய முடிவெடுக்கப்படும். 10. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் விற்பனை விலை முழுமையாகப் பெறப்பட்ட பின்னரே விற்பனைச் சான்றிதழானது வெற்றி பெற்ற வாங்குநரின் பெயரில் அதிகாரப்பூர்வ அலுவலரால் வழங்கப்படும். 11. பெயர் மாற்றத்துக்காகச் சட்டப்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் முதலான கட்டணங்கள் வெற்றி பெறும் வாங்குநரையே சாரும். 12. சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைகளான (சட்டப்படியான வீட்டு வரி, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) வருமான வரி பிடித்தம் (TDS), சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஏதேனும் அரசுக்கு, அரசின் கீழான அமைப்புகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டியிருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரரே செலுத்த வேண்டும். 13. எந்தக் காரணமும் சொல்லாமல், ஏலப்புள்ளியையோ ஒப்பந்தப்புள்ளியையோ எந்த ஒரு விலைகோரலையுமோ அனைத்து விலைகோரல்களையுமோ ஏற்க அல்லது தள்ளுபடி செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க / ஒத்தி வைக்க / ரத்துச் செய்யவும் , எந்தக் காரணமும் சொல்லாமல் விற்பனையின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மாற்றவும் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

நாள்: 26.08.2026, இடம் : சேலம் ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர், M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியபட்ட)

பெருநிறுவன அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், பிளாட்எண்: 14A,சௌத் பேஸ், இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600032.

கிளை அலுவலகம் 5M, ராமசந்திரபுரம்,தென்னூர், திருச்சி - 620 017.

கேட்பு அறிவிப்பு (பிரிவு 13(2) சர்:ஃபாஷி சட்டம் 2002-ன் படி)

இந்த அறிவிப்பானது பின்வரும் கடன் தாரர்கள்/ இணை கடன் தாரர்கள்/ ஜாமீன் தாரர்கள், ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் **(முன்னதாக அறியபட்ட ஸ்ரீராம் சிட்டியூனியன் பைனான்ஸ்)** [இணைப்பு ஆணை -NCLT.CP(CAA/69-76(CHE)/2022.IN CA (CAA)5,6,7,36-40 (CHE)/2022,Dt 09.11.2022)]-யிடம் பெறப்பட்ட கடன் தொகையை சரிவர செலுத்த தவறியதனால் இந்த கடன் கணக்கு வாராக்கடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டு, பிணைகாப்பு நிதிசொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைகாப்பு அமலாக்கச் சட்டம் 2002- ல் பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பானது உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 3-ன் கீழ் கையொப்பமிட அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் தாங்களின் முகவரிக்கு அறிவிப்பானது அனுப்பப்பட்டு தங்களிடம் சேராமல் எங்கள் வசம் திரும்பி சேர்ந்தது. ஆகவே இந்த பொது அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

கடன்தாரர்கள் / இணை கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	பிணை சொத்துக்களின் விவரங்கள்	கேட்பு அறிவிப்பு தேதி / நிலுவைதொகை	NPA தேதி
கடன் கணக்குஎ : BHAVATF2311240002 - எம்/எஸ்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா பவுண்டரி. உரிமையாளர்: திரு.வெங்கட்ராஜ், த/பெ:கோவிந்தராஜ்			
1. எம்/எஸ்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா பவுண்டரி. உரிமையாளர்: திரு.வெங்கட்ராஜ், த/பெ:கோவிந்தராஜ் எண்: 1-35/3, தாரமங்கலம், ஜலகண்டபுரம் (அஞ்சல்), மேட்டூர் (தாலுகா), சேலம் (மாவட்டம்)-636 501 2. திருமதி.ஷண்மதி, க/பெ:திரு.வெங்கட்ராஜ் 3. திரு.ரமேஷ் ஜி, த/பெ:கோவிந்தராஜ் 4.திரு.கோவிந்தராஜ், த/பெ:சின்னதாபி கதவு எண்: 5, LRG லேஅவுட், 2வது தெரு, T.C.மார்கெட் (அஞ்சல்), திருப்பூர் (தாலுகா), திருப்பூர் (மாவட்டம்)-641 604. 5.திருமதி.குப்பம்மாள், க/பெ:கோவிந்தராஜ் 6.எம்.எஸ்.வினோதினி, த/பெ:ரமேஷ் (அனைவரும் வசிக்கும் இடம்) எண். 10/3/30, சிட்டைக்காடு, ஜலகண்டபுரம் (போஸ்ட்), மேட்டூர் (தாலுகா), சேலம் (மாவட்டம்)-636 501.	SRO: ஜலகண்டாபுரம் மாவட்டம்: சேலம் தாலுகா: மேட்டூர் கிராமம்: தோரமங்கலம் Item.1 சர்வே எண் 46/15 (புன்செய்) - 0.1.41 ஹெக்டேர் பட்டா எண் 1884 பரப்பளவு - 1518 சதுர அடி Item.1 சர்வே எண் 46/7 (புன்செய்) - 0.01.83 ஹெக்டேர் பட்டா எண் 1617 பரப்பளவு - 1976¼ சதுர அடி **எல்லைகள் 01: வடக்கே** - 20 அடி அகல வீதி **தெற்கே** - மதுவுக்குச் சொந்தமான சொத்து **கிழக்கே** - குப்பம்மாளுக்குச் சொந்தமான நிலம் **மேற்கே** - 4 அடி அகல சாலை **எல்லைகள் 02: வடக்கில்** - 20 அடி அகலமுள்ள மேற்குத் தெரு **தெற்கில்** - கிருஷ்ணன் என்பவருக்குச் சொந்தமான நிலம் **கிழக்கில்** - 5 அடி அகலமுள்ள **வடக்கு**-தெற்குப் பொது நிலம் **மேற்கில்** - விஜயகுமாரி என்பவருக்குச் சொந்தமான நிலம்	**அறிவிப்பு அனுப்பிய தேதி: 27.05.2026** நிலுவையில் உள்ள தொகை **(20.05.2026) தேதிபடி ரூ. 31,62,639/- (முப்பத்தி ஒரு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்தி அறுநூற்று முப்பத்து ஒன்பது மட்டும்)**	03.07.2025

இந்த பொது அறிவிப்பு தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் கடன் தாரர்கள்/இணை கடன் தாரர்கள்/ ஜாமீன் தாரர்கள் தங்களின் கடன் கணக்கில் உள்ள நிலுவை தொகையை முழுவதும் செலுத்துமாறும் அறிவுறுத்தப்படுகிறது.தவறும் பட்சத்தில் இந்த பொது அறிவிப்பிலிருந்து 60 தினத்திற்க்கு பிறகு பிணைகாப்பு நிதிசொத்து மறுசீரமைப்புமற்றும் பிணைகாப்பு அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்து கொள்கிறோம்.

தேதி: 27.08.2026 அதிகாரப்பூர்வ அலுவலர். ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

சேலம்
மேட்டூர்
சங்ககிரி
எடப்பாடி
95666 11366

ஏற்காடு
ஆத்தூர்
99946 46385

தருமபுரி : 84896 34827

உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

சேலம்	98405 90012
ஓமலூர்	94433 93373
மேட்டூர்	94432 23065
ஏற்காடு	94432 01447
சங்ககிரி	94434 14850
ஆத்தூர்	93642 22063
தம்மம்பட்டி	94434 71248
எடப்பாடி	98659 77117
வாழப்பாடி	96009 69118
ஆட்டையாம்பட்டி	94892 94473